## நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை
## முன்னிலை : K.S.கண்மணி.–

**(தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 120–இன் கீழ் )**

**ந.க.எண் : 62/2026/TPI** **நாள் : 04-04-2026**

பொருள் : மனைப்பிரிவு பத்மநாபபுரம் நகராட்சி பத்மநாபபுரம்– B கிராமம் நகர அளவை எண் C9/45/2,3& 4 இல் 4019.42 ச.மீ. பரப்பளவு இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு – இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

பார்வை : 1. கன்னியாகுமரி மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் : 7908FCOL/2025/TCP, நாள் 29.09.2025.
2. மாமன்ற தீர்மானம் எண் : 520 நாள்: 07.03.2026.

பார்வையில் கண்டுள்ள கன்னியாகுமரி மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் செயல்முறை ஆணையில் இந்த நகராட்சி பகுதிக்குட்பட்ட பத்மநாதபுரம் – பி கிராமம் நகர அளவை எண் C9/45/2,3&4 இல் 4019.42 ச.மீ. இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான வரைபடத்திற்கு SWP/ம.வ / நா.உ.தி.கு.எண்: 48/2025 (இணையதள ஒப்புதல்) இன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சி பகுதிக்கு பத்மநாதபுரம் –பி கிராமம் நகர அளவை எண்: C9/45/2,3&4 இல் 4019.42 ச.மீ. பரப்பளவு இடத்தில் பார்வையில் கண்ட செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் பிரிவிற்கு கீழ்க்கண்ட திருமதி P.தாயம்மாள் மற்றும் 6 நபரகள் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

### நிபந்தனைகள்:

1, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019–இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்கு பொருந்தும். எனவே பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்படவேண்டும்.

2. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை மனுதாரர் சொந்த செலவில் வருவாய் உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. மனைகள் மற்றும் தெருக்கள் ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்திற்கு SWP/ம.வ / நா.உ.தி.கு.எண்: 48/2025. (இணையதள ஒப்புதல்). இன்படி ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தின்படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்க்கு மாறாக அளவுகள் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

4. தெருமுனையில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு (splay) அமைக்கப்பட வேண்டும்.

5. மேற்சொன்ன இரு நிபந்தைகளை நிறைவேற்றும் முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது .

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்ய பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். இதில் கடை பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக்கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகத்திற்க்காக மட்டுமே பயன்படுதப்பட வேண்டும், அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்க்காக நில அளவை ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

7. விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின் படி தனிதொரு குடியிருப்பு மனையில் தனிதொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக ஏக்காலத்திலும் அனுமதிக்கப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ அமைப்பையோ மறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுதக்கூடாது.

8. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியவாறு கட்டிட வரம்பு விடப்படவேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் முதல் 9 மீட்டர் வரையிலான அகல சாலைகளுக்கு முன்பக்க இடைவெளிகள் 1.5 மீட்டரும். 9 மீட்டருகக்கு மேல் 18 மீட்டர் வரையிலான சாலைகளுக்கு 3.00 மீட்டரும் 18 மீட்டருக்கு மேல் 30.50 மீட்டர் வரையிலான அகல சாலைகளுக்கு 4.5 மீட்டரும், 30.50 மீட்டருக்கு மேல் அகல சாலைகளுக்கு 6 மீட்டர் கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். 9 மீட்டர் வரை

அகலம் கொண்ட மனையின் பின்புற எல்லைக்கும் கட்டத்திற்கு இடையில் குறைதது 1.5 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும்.

9. மனையில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பு வீட்டிலும் மழைநீர் வடிகால் வசதி, கழிவு நீர் வசதி போன்றவை சுகாதார அதிகாரியின் ஒத்தசைவிற்க்கு ஏற்ப அமைதல் வேண்டும்.

10. மூலை முடுக்கு பகுதிகளில் மின்கம்பங்கள், தெருவிளக்கு கம்பங்கள் எதுவும் நடுதல் கூடாது.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை குறித்து வழங்கக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமார்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் மனைப்பிரிவு ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

13. ஒப்புதல் அழிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைவப்பிரிவு நுழைவாயிலில் 6 x 4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரதரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

14. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

04/04/2026.

**ஆணையாளர்,**
**பத்மநாபபுரம் நகராட்சி,**

**இணைப்பு:-**

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்,

04/4/26 4/4/2026.

**பெறுநர்:-**

P.தாயம்மாள்,S.பாலையானந்தம்,M.பார்வதி,S.கிருஷ்ணன்,P.தமிழ் செல்வி ,
P.சிவதாணு,P.தயா,

**நகல்:-**

1. நகர் ஊரமைப்பு உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊறமைப்பு அலுவலகம், நாகர்கோவில் .
2. நகராட்சி பொறியாளர்,( அடிப்படை வசதிகள் பரமாறிப்பின் பொருட்டு).
3. நகராட்சி வருவாய் அலுவலர் ,(காலியிட வரிவிதிப்பின் பொருட்டு).

## Proceedings of the Commissioner of
## PADMANABHAPURAM MUNICIPALITY

**PRESENT: K S KANMANI**

D.Dis.No. 62/2026 Dated : 03-Apr-2026

**Sub:** TOWN PLANNING - PADMANABHAPURAM MUNICIPALITY

S.No C9/45/2,3,4 of
PADMANABHAPURAM B TOWN Village -
Approved - Regarding.

**ORDER**

Permission is hereby granted to Mr.THAYAMMAL PARVATHI KRISHNAN SIVA THAYA TAMIL BALA to Layout of S.No. C9/45/2,3,4 of PADMANABHAPURAM B TOWN Village Into 21 plots subject to the following condition. The approved plans are sent herewith.

The Layout of plot should be in accordance with the approved plan.

Encl: Approved Plan

To
Mr.THAYAMMAL PARVATHI
KRISHNAN SIVA THAYA TAMIL
BALA
34/55, KEELAKULAM,
Santhaivazhi Road (BLOCK NO.8
(1-48 A)), PULIYOORKURICHY,
THUCKALAY

03/04/2026

Commissioner,
PADMANABHAPURAM MUNICIPALITY

03/4/2026
03/4/2026

**CONDITIONS**

| S.No. | Condition Name |
|---|---|
| 1 | 1 |
| 2 | Note: (a) This permit is furnished by / virtue / of power delegates by CMDA under Sec. (3) of section 9-C of Tamil Nadu Town and country planning Act 1971 (Act 35 of 1972) |
| 3 | (b) According to section 79 of the T & C P Act 1971 (Act 35 of 1972) as amended by Act 22 of 1974 any person aggrieved by any decision or under of the planning authority under section 49 of sub section (1) section 54 may appeal to the Government within two Months from the date on which the decision or order was communicated |
| 4 | (c) The member secretary, chennai metropolitan development authority reserves the right to revoke or modify the planning permission in the event of planning permit having been granted based either or wrong information furnished by the applicant or by misrepresentation of the facts or by any lapse or procedural formalities to be followed or permit having been obtained by any fradulent manner |

LAYOUT PLAN APPROVED
VIDE PADMANABHAPURAM MUNICIPALITY
ROC No: 62/2026 DATED: 3/4/26
SUBJECT TO CONDITIONS LAID DOWN IN ASSISTANT DIRECTOR, DISTRICT TOWN AND COUNTRY PLANNING OFFICE, NAGERCOIL.
LETTER ROC No: 7908 FCOL/2025
DATED: 29-9-2025

COMMISSIONER
PADMANABHAPURAM MUNICIPALITY




| தமிழ்நாடு அரசு<br>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்<br>கன்னியாகுமரி மாவட்டம் | D.T.C.P |
|---|---|

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், பத்மனாபபுரம் நகராட்சி, பத்மனாபபுரம்-B கிராமம், சர்வே எண் -C9/45/2,3,4 ஆகியவற்றில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.(HACA) திட்டப்பகுதி

அளவு:1:400

இணையதள விண்ணப்ப எண் :7908FCOL

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பு | : 4019.42 ச.மீ(0.9929ஏக்கர்) |
| உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு | : 949.23 ச.மீ |
| மனைகளின் பரப்பு | : 3070.19 ச.மீ |
| கோரிய மனைகள் | - 19 |
| ஒதுக்கிய மனைகள் | - 19 |

மனைப்பிரிவு இடத்தின் எல்லை
நிலையிலுள்ள சாலை
உத்தேச மனைப்பிரிவு சாலை

<u>பொது ஒதுக்கீடுகள்:</u>

தேவைப்படும் பூங்கா பரப்பு - (4019.42 - 949.23)x$\frac{10}{100}$ )=307.02 ச.மீ

பூங்காவிற்க்கு சமமான நிலத்திற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டுத் அரசுக்கு செலுத்தப்படவேண்டும்.

மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி மனுதாரரால்ரூ.-16,19,953/- SBI வங்கி மூலம் அரசு கணக்கில் செலுத்தப்பட்டது.

ஒதுக்கப்படும் உள்ளாட்சிக்கு வழங்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு மனைப்பரப்பு (A) - 31.0 ச.மீ (1.009%)

ஒதுக்கப்படும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு (TANGEDCO)(B) - 24.5 ச.மீ(0.797%)

மூலை முடக்கு - 12.0மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு - 1.50மீ x 1.50மீ

தானப்பத்திரம் எண்கள்: 2964/2025 , 6295/2024 Dated : 12-08-2025,

சீர்திருத்தப்பத்திரம் எண்கள்: 3274/2025, Dated:08/09/2025(தக்கலை சார்பதிவாளர் அலுவலகம்)

<u>நிபந்தனைகள்</u>

1. அராணை நிலை எண்:16 மற்றும் 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019 மற்றும் 31.01.2020 மற்றும் அராணை எண் 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 19.12.2020-ன் படி மனைப்பிரிவிற்கான சாலைகள் மூலை முடக்கு மற்றும் A என காண்பிக்கப்பட்டுள்ள பொது ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கும் B என காண்பிக்கப்பட்டுள்ள பொது ஒதுக்கீட்டினை மின்சார வாரியத்திற்கும் தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதை பத்மனாபபுரம் நகராட்சி, ஆணையாளர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. District Forest Officer and Wildlife Warden, Kaniyakumari Division -TS4/19019/2024 Dated: 23.07.2024.
3. Assistant Director of Geology Minning, Nagercoil, Kniyakumari District -Roc.No.675/G&M/2024.Dated:27.08.2024.
4. சார் ஆட்சியர் அலுவலகம் பத்மநாபபுரம் Letter No - மு.மு.ஆ1/3683/20
5. இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படும் முன் நில ஆர்ஜிதப் எனவும் எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்டவருவாய் அலுவலரிடமிருந்து உத் பெறப்படவில்லை எனவும் பத்மனாபபுரம் நகராட்சி, ஆணையாளர் அவர்க செய்து கொள்ள வேண்டும்.
6. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனை ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிர் ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்ம வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்
7. இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகை எழுப்புதல் கூடாது.

SWP/ம.வ / நா.உ.தி.கு.எண் : 48/2025

<u>குறிப்பு</u>
அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Signature valid

அளவர்/உதவி வரைவாளர் வரைவாளர் நிலைIII மேற்பார்வையாளர்

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்